# Iniyavai Narpathu – இனியவை நாற்பது

பூதஞ்சேந்தனார் என்பவர் இயற்றிய நூல் இனியவை நாற்பது. இது நாற்பது வெண்பாக்களினால் ஆனது. பண்டைக்காலத் தமிழ்நூல் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இதுவும் ஒன்று. உலகில் நல்ல அல்லது இனிமையான விடயங்களை எடுத்துக்கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலின் நோக்கம். ஒவ்வொரு பாடலும் மூன்று நல்ல விடயங்களை எடுத்துக் கூறுகின்றது.

## ஆசிரியர் வரலாறு

இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் எனப்படுவர். இவர் தந்தையார் மதுரைத் தமிழாசிரியர் பூதன். இவர் வாழ்ந்த நாடு பாண்டி நாடு. இவர் சிவன் , திருமால், பிரமன் முதலிய மூவரையும் பாடியுள்ளார். ஆதலால் இவரின் சமயம் வைதீகமாகும். இவர் சர்வ சமய நோக்குடையவராயிருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இவர் பிரமனைத் துதித்திருப்பதால் கி.பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பிந்தியவர் என்பதோடு, இன்னா நாற்பதின் பல கருத்துக்களை அப்படியே எடுத்தாளுவதால் இவர் அவருக்கும் பிந்தியவர் எனலாம். அதனால் இவரது காலம் கி.பி. 725-750 எனப்பட்டது.

## நூற்குறிப்பு

இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 செய்யுட்களைக் கொண்டது. இவற்றுள், 'ஊரும் கலிமா ' எனத் தொடங்கும் பாடல் ஒன்று மட்டுமே ( 8) பஃறொடை வெண்பா. ஏனைய அனைத்தும் இன்னிசை வெண்பாவினால் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலில் நான்கு இனிய பொருள்களை எடுத்துக் கூறும் பாடல்கள், நான்கே நான்கு தான் உள்ளன( 1, 3, 4, 5). எஞ்சிய எல்லாம் மும்மூன்று இனிய பொருள்களையே சுட்டியுள்ளன ; இவற்றில் எல்லாம் முன் இரண்டு அடிகளில் இரு பொருள்களும் , பின் இரண்டு அடிகளில் ஒரு பொருளுமாக அமைந்துள்ளமை கவனிக்கத் தக்கது. வாழ்க்கையில் நன்மை தரும் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து 'இனிது' என்ற தலைப்பிட்டு அமைத்திருப்பதால்

இஃது 'இனியவை நாற்பது ' எனப்பட்டது. இதனை 'இனிது நாற்பது ', 'இனியது நாற்பது', 'இனிய நாற்பது' என்றும் உரைப்பர்.

## ஆசிரியர்

- மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்.
- கி .பி.2ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும் என்பர்

## நூற்குறிப்பு

- மும்மூர்த்திகளை தொழும் கடவுள் வாழ்த்து இதில் இடம் பெற்றுள்ளன
- இதில் 124 பாடல்கள் உள்ளன

## பாவகை

- மும்மூர்த்திகளை தொழும் கடவுள் வாழ்த்துடன் இந்நூலில் 40 வெண்பாக்கள் உள்ளன ஒவ்வொரு பாடலிலும் இவையிவை . .இனியவையெனச் செப்புகிறது

## சிறந்த தொடர்கள்

- ஒப்ப முடிந்தால் மனை வாழ்க்கை முன்னினிது
- கடமுண்டு வாழாமை காண்டலினிது
- மான மழிந்த பின் வாழாமை முன்னினிது
- வருவாயறிந்து வழங்கலினிது
- குழவி தளர்நடை காண்டல் இனிது
- கயவரைக் கைவழிந்து வாழ்தலினிது


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in